மாலை முரசு

பக்கங்கள் 16+ 03

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 08 ஞாயிற்றுக்கிழமை 24.08.2024 | அதிர்வு 24

## 14 தமிழக மீனவர்கள் நாளை யாழ். வருகை



(ந.லோகதயாளன்)

தமிழக மீனவர்கள் 14 பேர் நாளை தனியான படகில் யாழ்ப்பாணத் துக்கு வருகை தருகின்றனர்.

02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# ரணிலைப் பாதுகாக்க சுமந்திரன் முயற்சியாம்

## யாழில் அமைச்சர் பிமல் கவலை தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

"ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப் பட்டமை தவறு எனச் சுமந்திரன் கூறுவது கவலை அளிக்கின்றது. அவர் யாழ்ப்பாணத்தில் இருந்து கதைக்கின்றாரா அல்லது ரணிலின் வீட்டில் இருந்து கதைக்கின்றாரா.?"

- இவ்வாறு அமைச்சர் பிமல் ரத்நாயக்க கேள்வி எழுப்பினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

02

## ரணிலின் கைதால் ராஜபக்ஷக்கள் நடுக்கத்தில்



### அமைச்சர் சந்திரசேகர் விளாசல்

(எஸ்.நிதர்ஷன்)

ரணில் மீது சட்டம் பாய்ந்துள்ளதால் ராஜபக்ஷக்கள் ஆட்டம் கண்டுள்ளனர் என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திர சேகர் தெரிவித்தார்.

"வடக்கில் மக்களுக்குரிய காணிகளை முழுமையாக விடுவிக்கும் நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி இருக்கின்றார். தையிட்டு விகாரைப் பிரச்சினைக்கும் சுமுக தீர்வு காணப்படும்." – என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர்

03

# ரணில் தீவிர மருத்துவக் கண்காணிப்பில் இருப்பதால் செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராக முடியாது!

## கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் தகவல்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராக முடியாது என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லனா தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் உடல் நிலைமையைக் கண்காணித்த பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“முன்னாள் ஜனாதிபதிக்கு நீரச்சத்து குறைபாடு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அவரது இரத்தத்திலும் பிற உடல் அறிகுறிகளிலும் மாற்றங்கள் காணப்படுகின்றன என்று பெல்லானா கூறினார்.

இந்த நிலை ‘வெப்ப பக்கவாதம்’



காரணமாகவும் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இந்த நிலைக்குக் காரணம், அன்றைய தினம் அவர் கடுமையான வெப்பத்தில் சுமார் 10 மணி நேரம் நீதிமன்ற அறையில் இருந்திருக்கலாம்.

அந்த நேரத்தில் அவருக்குச் சரியான தண்ணீர் அல்லது உணவு கிடைக்காமல் போயிருக்கலாம்.

முன்னாள் ஜனாதிபதி தற்போது தீவிர மருத்துவக் கண்காணிப்பில் உள்ளார். அவர் நீர்ச்சத்து குறைபாடு காரணமாக சிகிச்சை பெற்று வரு கின்றார். பல சிறப்பு மருத்துவ குழுக்கள் அவரது உடல் நிலையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றன.

நீரிழப்பை முறையாக நிர்வகிக்கா விட்டால், அது சிறுநீரகங்கள், மூளை மற்றும் பிற முக்கிய உறுப்புக்களைப் பாதிக்கும் கடுமையான சிக்கல்களை ஏற்படுத்தும். இந்த ஆபத்தைத் தவிர்க்க அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் வைக்கப் பட்டுள்ளார்.

இருப்பினும், மருத்துவரின் கூற்றுப்படி, முன்னாள் ஜனாதிபதி சரி யான சிகிச்சையைப் பெற்ற பிறகு சுமார் இரண்டு அல்லது மூன்று நாட்களில் குணமடைந்து சாதாரண நிலைக்குத் திரும்புவார்.” – என்றார்.

# தெல்லிப்பழையில் விபத்தில் சிக்கி வயோதிபர் உயிரிழப்பு

## சடலத்தை அடையாளம் காண உதவுமாறு பொலிஸார் கோரிக்கை

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தவளைகிரி முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு அண்மித்த பகுதியில் இருந்து 65 – 70 வயது மதிக்கத்தக்க வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த மரணத்துடன் தொடர்புடையவர் எனத் தெரிவித்து ஒருவர் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் சரணடைந் துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

நேற்று இரவு மேற்குறித்த பகுதியில் வயோதிபர் ஒருவரது சடலம் மீட்கப்பட்டு தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்



டுள்ளது.

இந்த மரணத்துடன் தொடர்புடையவர் என்ற வகையில், சந்தேகநபர் ஒருவர் தெல்லிப்பழை பொலிஸாரிடம் சரண டைந்துள்ளார்.

அவர் வழங்கிய வாக்குமூலத்தில் பட்டா ரக வாகனத்தை நேற்று இரவு பின்பக்கமாகச் செலுத்தியபோது மேற்படி வயோதிபர் தனது வாகனத்தில் சிக்குண்டு உயிரிழந்துள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

இருப்பினும் அந்த வயோதிபர் யார் என இதுவரை அடையாளம் காணப் படாத நிலையில் சடலம் வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

எனவே, அந்தச் சடலத்தை அடை யாளம் காண உதவுமாறு பொலிஸார் மக்களிடம் கோரிக்கை முன்வைத் துள்ளனர்.

### ரணிலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் கூறிய தாவது:-

“கறுப்பு ஜுலைக் கலவரம், நூலகம் எரிப்பு, படுகொலைகள் உட்பட பல சம்பவங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய நபர்தான் ரணில் விக்கிரமசிங்க. மத்திய வங்கி பிணைமுறி மோசடி குற்றச்சாட்டும் உள்ளது. இப்படிப்பட்ட நபரைப் பாதுகாக்கும் விதத்தில் சுமந் திரன் கருத்து வெளியிடுவது கவலை யளிக்கின்றது.

இந்த நாட்டில் சட்டம் என்பது அனை வருக்கும் சமம். பலம் பொருந்தியவர் களுக்கு எதிராகச் சட்டம் செயற்படாது என்ற நிலை மாற்றப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க மட்டும் அல்ல எப்படியான நபரும் சட்டத்துக்குக் கட்டுப்பட்டே செயற் பட வேண்டும். இந்த விடயத்தில் எவருக்கும் விதி விலக்கல்ல.

அதேவேளை, இந்தியாவில் இருந்து நாடு திரும்பும் இலங்கை அகதிகளுக்கு உரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுப் பதற்கு நாம் தயாராகவே இருக்கின் றோம்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிக்கு வந்து எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி ஒரு வருடமாகின்றது. இதனை முன்னிட்டு எதிர்வரும் செப்டெம் பர் முதலாம் திகதியில் இருந்து அபிவிரு த்தித் திட்டங்கள் ஆரம்பமாகின்றன. வடக்கில் இருந்துதான் அதற்குரிய நடவடிக்கையைமேற்கொள்ளவுள்ளோம்.” – என்றார்.

### 14 தமிழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் சிறைப் பிடிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள படகுகளின் உரிமையாளர்களே தனியான படகில் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்ப டுகின்றனர்.

இராமேஸ்வரம் பகுதியில் இருந்து வருகை தரும் படகில் இராமேஸ்வரம் விசைப்படகு உரிமையாளர் சங்கத்தின் தலைவர் தலைமையில் படகு உரிமையா ளர்கள், இயந்திரத் திருத்துநர்கள் உள் ளிட்ட குழுவினர் வருகை தருகின்றனர்.

நடுக் கடலுக்கு வருகை தரும் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் காங்கேசன்துறை துறைமுகம் வரையில் அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு வருகை தரும் தமிழக மீனவர்கள் மயிலிட்டி உள்ளிட்ட இடங் களில் தரித்து நிற்கும் தமிழக மீன வர்களின் படகுகளைப் பார்வையிட வுள்ளனர்.

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:–

“ரணில் விக்கிரமசிங்கவை நெருங்க முடியாது, அவர் மீது கை வைக்க முடியாது, அவர் சர்வதேச இராஜந்திரம் தெரிந்தவர், நரித்தனமானவர், அவரோடு விளையாட முற்பட வேண்டாம் என எதிரணியினர் கூறி வந்தனர். இந்நிலையில் அவர் மீது சட்டம் பாய்ந்துள்ளதால் ராஜபக்ஷக்கள் ஆட்டம் கண்டுள்ளனர்.

நாட்டுக்குத் தீங்கு, இழப்பு ஏற்படுத்தியது ரணிலா, ராஜபக்ஷவா என்பது எமக்கு முக்கியம் அல்ல. எவராக இருந்தாலும் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகச் சட்டம் தனக்குரிய கடமையைச் செய்யும்.

வடக்கில் மக்களுக்குச் சொந்தமான அனைத்து காணிகளும் விடுவிக்கப்படும். இந்த நிலைப்பாட்டில் ஜனாதிபதி உறுதியாக இருக்கின்றார். தையிட்டி விகாரைப் பிரச்சினையும் தீர்க்கப்படும். வடக்குக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் முதலீடுகள் தொடர்பில் சில அதிகாரிகள் இழுத்தடிப்புச் செய்து வருகின்றனர். அவர்கள் பற்றியும் எமக்குத் தெரியும். அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.” – என்றார்.




நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பிமலின் 'அளப்பு'!

'பிள்ளையார் கல்யாணம் போல' நாளை நடக்கும், நாளை நடக்கும் என்று இந்த அரசாங்கம் தள்ளிப் போட்டு வரும் விவகாரங்களில் முக்கியமான ஒன்று பலாலி விமான நிலைய விரிவாக்கம் ஆகும்.

இப்போது போக்குவரத்து, துறை முகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்தநாயக் கவும் தன் பங்குக்கு இந்த விடயத்தில் தொடர்ந்து 'கயிறு' விட்டு வருகிறார்.

காங்கேசன்துறை துறைமுகத்தின தும் பலாலி விமான நிலையத்தினதும் அபிவிருத்திக்காக பெருமளவு நிதியை நன்கொடையாக இந்தியா வழங்க முன்வந்திருந்தும் அந்தப் பணிகளை முன்னெடுக்காமல் நந்தி போல இடையில் குந்திக் கொண்டு இருந்து தடுத்து வருகிறார் அமைச்சர் பிமல் ரத்நாயக்க என்று 'காலை முரசு' நாளிதழின் முக் கிய பத்தியாகிய 'இரகசியம் - பரகசி யம்' பகுதியில் கடந்த மார்ச் 30 ஆம் திகதி காலை இதழில் விளக்கமாகக் குறிப்பிட்டிருந்தோம்.

அன்றைய தினம் பலாலி விமான நிலையத்தைப் பார்வையிட வந்த அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் இது குறித்து செய்தியாளர்கள் நேரடி யாகக் கேட்டார்கள்.

''பழைய அரசாங்கம் போல நாங்கள் பொய் கூற மாட்டோம். யாழ். பலாலி விமான நிலையத்தை நான்கு மாதங்களுக்குள் சர்வதேச விமான நிலையமாக உரிய தரத்துடன் மாற்று வோம்!'' என்று அங்கு வைத்து உறுதி மொழி அளித்தார் அமைச்சர்.

இப்போது நான்கு மாதங்களும் கடந்து 20 நாள்களும் ஆகிவிட்டன. அதற்குப் பின்னர் அடுத்த தடவை பிள்ளையார் கல்யாணம் போல அவர் நாடாளுமன்றத்தில் திரும்பவும் கதை அவிழ்த்து விட்டிருக்கிறார்.

பலாலி விமான நிலைய அபிவிருத்தி தாமதமாவது ஏன் என்று யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சுட்டிக்காட்டி எழுப்பிய கேள்விக்கு மீண்டும் சாக் குப் போக்குக் கருத்தைச் சொல்லி இருக்கிறார் அவர்.

யாழ். பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றி அமைப்பதற்கு எதிர்பார்க்கிறோம் என்று வாக்குறுதி அளித்த அவர், அதற்கான காணி சுவீகாரம் பற்றி எல்லாம் பேசுகிறார். இதனை மத்தள விமான நிலையம் போன்ற வெள்ளை யானையாக அல்லாமல் வெற்றிய ளிக்கக்கூடிய விமான நிலையமாக மாற்ற எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் நாடாளுமன்றத்தில் மீண்டும் உறுதி அளிக்கிறார்.

அவர் ஏற்கனவே கொடுத்த நான்கு மாத காலக்கெடு கடந்து விட்டது. இப்போது அவகாசம் குறிப்பிடாத வாக்குறுதி.

பலமான புலம்பெயர் சமூகத்தை கொண்ட தமிழர்களின் பிரதேசத்தில் சர்வதேச தரத்திலான பாரிய விமா னங்கள் வந்திறங்கக் கூடிய வசதி செய்து கொடுக்கப்பட்டால் கட்டு நாயக்காவின் கதி கந்தலாகி விடும் என்ற பயத்தில் சிங்களம் இவ்விடத் தில் குசும்பு பண்ணி வருகின்றது என்ற சந்தேகம் தமிழ் மக்களுக்கு நீண்ட காலமாக உண்டு.

ஆயினும் இப்போது சுற்றுலாப் பயணிகள் அந்த விமான நிலையத்தில் வந்து குவிகின்றமையால் பலாலிக்கும் சற்று சர்வதேசப் பயணிகளை விட்டுக் கொடுத்தால் என்ன என்ற தாராளம் - மனமாற்றம் - சிங்களத் தீவிரப் போக்கில் ஏற்பட்டிருப்பதாகக் கூறப் படுகின்றது.

இவ்விடயத்தை பிமல் ரத்நாயக்க போன்றவர்கள் கையாள்வதும், அபி விருத்திப் பணிகளை துரிதமாக முன் னெடுப்பதற்கான நடவடிக்கைகளை உஷார் படுத்தாமல் - உறுதிப்படுத் தாமல் - வெறும் வாய்ப் பந்தல் சவ டால் கதைகளை அவர் கதைத்து வரு வதும் இவ்விவகாரத்தில் தமிழரின் சந்தேகத்தை உறுதிப்படுத்தி நிற்கின் றன.

இந்த விடயத்தில் அவரின் பேச்சு செயலில் காட்டப்படும் போதுதான் அதனை நம்பலாம். பிள்ளையார் கல்யாணம் போல பேச்சில் இழுத் தடிப்பதில் அர்த்தம் இல்லை. அதை நம்புவதற்கும் தமிழர்கள் அறிவற்ற வர்களும் அல்லர்.



# கிராமிய வீதி அபிவிருத்தித் திட்ட வீதிகள் அங்குரார்ப்பண நிகழ்வு!

(சர்ஜூன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலர் பிரிவின் கீழ் மல்வத்தை - 02 கிராம சேவகர் பிரிவில் 4.7 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் புதுநகர் முதலாம் குறுக்குத் தெரு புனரமைப்புக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று (23) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆதம் பாவா கலந்து கொண்டு வீதி வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஏ. முனாஸீர், மாவட்ட செயலக கணக்காளர் ஐ.எம்.பாரீஸ், சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர்களான வை.வி.எம். நவாஸ், எஸ்.டனோஜன், காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் ஏ.பர்ஹான், தேசிய மக்கள் சக்தியின் வளத்தாப்பிட்டி கிராம அமைப்பாளர் எஸ்.சாந்தகுமார், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள், தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை இவ் கிராமிய வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மலையடிக்கிராமம், மல்வத்தை-1 கிராம ஆகிய கிராமங்களிலும் இந்த வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.









# “சமுதாயத்தின் சவால்களை வெல்வோம்” மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்வு!

(ஹஸ்பர் ஏ.எச்.)

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ. ஸ்ரீபதியின் வழிகாட்டலுக்கு அமைய தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கல்மெட்டியாவ வித்தியால மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு நாடகச் செயற்பாட்டின் அணுகுமுறையுடன் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் வளவாளராக தம்பலகாமம் பிரதேச செயலக சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.ஹம்சபாலன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர், சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.ஹம்சபாலன், கல்மெடியாவ வடக்கு கிராம சேவகர் பிரிவின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அனஸ் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# நடமாடும் சேவை மூலம் இனங்காணப்பட்ட 36 பேருக்கு விரைவில் கண்புரை சிகிச்சை

## யாழ். அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவிப்பு





நடமாடும் சேவை மூலம் இனங்காணப்பட்டவர்களில் முதற்கட்டமாக 36 பேருக்கு இரு வாரத்தில் கண்புரை சிகிச்சை நடைபெறும் என்று அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

‘கிளீன் ஸ்ரீலங்கா’ செயற்றிட்டத்தின் கீழ் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் மற்றும் உடுவில் பிரதேச செயலகத்திலும் முறையே கடந்த 14 ஆம் திகதி மற்றும் 15 ஆம் திகதி நடைபெற்ற விசேட நடமாடும் சேவையில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களுடன் அண்மையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது கருத்து தெரிவித்த அரச அதிபர் ,

பருத்தித்துறை மற்றும் உடுவிலில் நடைபெற்ற விசேட நடமாடும் சேவைகளானது வெற்றியடைந்துள்ளதாகவும், இரண்டு நடமாடும் சேவையிலும் எதிர்பார்த்த மக்களை விட அதிகமானோர் பங்கேற்றனர்.அவ் நடமாடும் சேவைகளில் கடமையாற்றிய பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்டச் செயலக பிரதேச செயலக அனைத்துத் தர உத்தியோகத்தர்களுக்கும் தமது நன்றியினைத் தெரிவித்தார்.

இந்த நடமாடும் சேவைகளில் குறிப்பாக கண் பரிசோதனை, ஆட்பதிவுச் சேவை, மருத்துவ பரிசோதனைச் சேவை, பிறப்பு இறப்பு பதிவுச் சேவை, மோட்டார் வாகன போக்குவரத்து சேவை மற்றும் ஓய்வூதியச் சேவைக்கே அதிக பொது மக்கள் பங்குபற்றினர்.

பொது மக்களின் மேற்படி சேவைகளை கருத்தில் கொண்டு ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாக நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

அந்த வகையில் செப்டம்பர் 16 ஆம் திகதி சங்கானை பிரதேச செயலகத்திலும், 30 ஆம் திகதி காரைநகர் பிரதேச செயலகத்திலும் மாவட்டச் செயலகத்தால் நடமாடும் சேவை பிரதேச செயலக ஒத்துழைப்புடன் நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் நடைபெற்ற நடமாடும் சேவையில் கண் பரிசோதனையில் இனங்காணப்பட்டவர்களுக்கு முதற்கட்டமாக 36 பேருக்கு கண்புரை சிகிச்சை இரண்டு வாரத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் ஒத்துழைப்புடன் வழங்கப்படவுள்ளது.

பொது மக்களுக்கான சேவையில் அனைவரதும் ஒத்துழைப்புக்களை வினைத்திறனாக வழங்குங்கள்.- என்றார்.

கலந்துரையாடலில் மேலதிக அரச அதிபர் க. சிவகரன், மேலதிக அரச அதிபர் (காணி) பா. ஜெயகரன் உள்ளிட்ட மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# விளை நிலத்தை மீட்க ஜனாதிபதி செயலகம் முன் போராடிய விவசாயிகள்!

■ ஹஸ்பர் ஏ. ஹலீம்.

திருகோணமலை முத்து நகர் விவசாயிகள், அபகரிக்கப்பட்ட தங்களது விவசாய நிலத்தை மீட்க கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலகம் முன்பாக 240 கிலோ மீற்றர் தூரம் பயணம் மேற்கொண்டு போராடியுள்ளனர்.

முத்து நகர் விவசாயிகளின் நெற் செய்கைக்கான சுமார் 800 ஏக்கர் அளவில் இலங்கை துறை முக அதிகார சபையினரின் காணி என்ற போர்வையில் இரு தனியார் நிறுவனங்களுக்கு சூரிய மின் சக்தி உற்பத்திக்காக (மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி) வழங்கியுள்ளனர்.

இதனால் அந்தப் பகுதி விவசாயிகள் தங்களது எதிர்வரும் பெரும்போக விவசாய செய்கையை கூட மேற்கொள்ள முடியாத நிலையில் தவிக்கின்றனர்.

இது குறித்து அப் பகுதி விவசாய சங்க தலைவியை சந்தித்து வினவிய போது திருமதி எஸ்.சஹீலா தெரிவிக்கையில்,

அண்மையில் எங்களுடைய முத்து நகர் விவசாய காணி கபளீகரம் செய்யப்பட்டதை அடுத்து ஜனாதிபதி செயலத்துக்கு சென்றோம். எங்களை சந்திக்க விடாது பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபட்டனர். இதனால் போராட்டத்தை முன்னெடுத்தோம். அதன் பின்னர் குறித்த செயலகத்தில் குறிப்பிட்ட சிலரை மாத்திரம் சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. இதன்போது அரச தரப்பில் அவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் நல்லதொரு முடிவைத் தருவார்கள் என்று கூறினர்.

பெரும்போக நெற் செய்கைக்கான விதைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கவுள்ள தருவாய் தற்போது நெருங்கியுள்ளது. எங்களுக்கான விவசாய நிலத்தை மீள ஒப்படைக்க வேண்டும். இதனால் எங்கள் வாழ்வாதாரம் முற்று முழுதாக பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போது ஆளுங் கட்சி பிரதிநிதிகளை சந்திக்கச் சென்ற போது வாய்ப்பு கிடைக்கவில்லை. எங்களுக்கான காணி தொடர்பில் துறை முக அதிகார சபைக்கே சொந்தம் என கூறினர். 53 வருடங்களாக விவசாயம் செய்து வந்தோம். சிறுபோகம் பெரும் போகம் என மூன்று முறை செய்துள்ளோம் .

சோலர் திட்டங்களை வரவேற்கிறோம் ஆனால் எங்கள் காணிகளை கையகப்படுத்தாதீர்கள் . விவசாயிகள் நாட்டின் முதுகெழும்பு விவசாயத்தை நிலத்தை தவிர்த்து ஏனைய காட்டுப் பகுதிகளை வைத்து செய்யலாம். விவசாயிகள் நாங்களே போராடுகிறோம் எங்கள் நிலத்தை எங்களுக்கு தாருங்கள்.– என்றார்.

அப்பாவி விவசாயிகள் நெற் செய்கையை நம்பியே வாழ்ந்து வந்த நிலையில் தற்போது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். இதனால் திருகோணமலை மாவட்ட ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு உள்ள காணிகளை தனியார் நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளனர். இதனால் வீதியில் இறங்கி போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கின்றனர்.

இது குறித்து அப் பகுதி விவசாய சங்கத்தின் உப தலைவர் பாபு தெரிவிக்கையில்,

1972 இல் இருந்து எங்கள் பாட்டன் காலத்தில் இருந்து இங்கு விவசாயம் செய்து வருகிறோம். இப்போது இரு வருடங்களாக இலங்கை துறை முக அதிகார சபை தங்கள் காணி எனக் கூறி சோலர் திட்டத்துக்காக கையகப்படுத்தியுள்ளது. இதனுடன் ஆளும் கட்சி எம். பிக்கள் கூட எங்களுக்கு இது தொடர்பில் உதவுவதாக சந்தோசப்படுத்தினர். பிரதியமைச்சரை சந்திக்க

தொடர்ச்சி▼






# விளை நிலத்தை மீட்க ஜனாதிபதி செயலகம் முன் போராடிய விவசாயிகள்!

தொடர்ச்சி▲

முயற்சித்த போதும் பலன் கிட்டவில்லை. இதனால் தான் மாவட்ட செயலகம் தொடக்கம் ஜனாதிபதி செயலகம்வரை போராடினோம்.

தற்போதைய அரசு நீதியை பெற்றுத் தர வேண்டும். போராட்டத்தின் போது எங்களை பொலிஸார் அடித்து உதைத்து தாக்கினார்கள். ஆளுங்கட்சியினர்கள்தான் இதனை தூண்டி விட்டு எங்களைப் பொலிஸார் தாக்கினார்கள். எங்களுக்கு அரச அதிகாரிகள் மூலமாக அவர்களை அனுப்பி பேச்சு வார்த்தை தேவையில்லை மக்கள் பிரதிநிதியாகிய நீங்களே தீர்வை பெற்றுத் தர வேண்டும்.– என்றார்.

நெற்செய்கை மேற்கொள்ளவுள்ள நிலங்களையே தற்போது சூரிய மின் சக்தி உற்பத்திக்காக அபகரித்துள் ளனர். பரம்பரை பரம்பரையாக பல அரசாங்கங்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்த போதும் கூட மகிழ்ச்சிகரமாக விவசாயத்தை செய்து வந்தார்கள். விவசாய பூமியை அபிவிருத்தி செய்யவும் விவசாயிகளுக்கு விழிப்புணர் வுகள் என பல நிகழ்வுகளை தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், கமநல அபிவிருத்தி திணைக்களம் ஆகியவர்கள் இணைந்து குறித்த பகுதியில் அமுல்படுத்தியுள்ளனர்.

ஆனால் பல்வேறு வீதிப் போராட்டங்களை நடத்தி காணிகளை பெற முயற்சித்து வருகின்றனர். இந்தப் போராட்டக் களம் மூலமாக தாக்குதலுக்கு உள்ளா னதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து விவசாய குடும்ப பெண்மணி ஒருவர் தெரிவிக்கையில,

விவசாய நிலத்தை மீட்கவும் எங்கள் உரிமைகளை பெறவுமே போராடினோம். அண்மையில் போராட்டம் காரணமாக பொலிஸார் என்னை தூக்கி வாகனத்துக்கு கீழே வீசினார்கள். இதனால் கடந்த மூன்று நாள்களாகக் கையைத் தூக்க முடியாதளவுக்கு உடல் உள ரீதியான பாதிப்புக்களுக்கு ஆளாகியுள்ளேன்.

இந்தக் காணிப் பிரச்சினையை தீர்த்துத் தருவதாக வாக்குறுதியளித்ததால்தான் அவர்களுக்கு வாக்கு போட்டோம். ஆனால் காணியை அபகரித்துள்ளனர். எங்கள் காணிகளை எங்களுக்கு பெற்றுத் தாருங்கள் என்று தெரிவித்தார்.

குறித்த இந்தத் தாய் திருகோணமலை மாவட்ட செயலகம் முன்னால் போராட்டத்தின் போது பொலிஸாரின் தாக்குதளுக்குள்ளாகி பாதிக்கப்பட்ட நிலையில் இந்தக் கருத்தினை பிரத்தியேகமாக வழங்கியுள்ளார்.

இலங்கையில் விவசாய செய்கை ஊக்குவிக்கப்பட வேண்டும் என்ற நிலையில் அரசுபல மானிய திட்டங்களை வழங்கியுள்ள போதிலும் குறித்த பகுதி விவசாயிகள் மாத்திரம் இந்த இழிவு நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

ஆட்சி அதிகாரத்தில் உள்ள அநுர குமார அரசாங்கம் தேர்தல் காலங்களில் பல வாக்குறுதிகளை வழங்கியுள் ளார். ஆனால் விவசாய பூமியை இவ்வாறு கபளீகரம் செய்து நீண்ட கால குத்தகைக்கு வழங்குவது நியாய மானதல்ல .

குறிப்பாக முத்து நகர் பகுதியில் 350 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் உள்ள நிலையில் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர் இவர்களுடன் இணைந்து மக்கள் போராட்ட முண்ணனியை சேர்ந்த வசந்த முதலிகே உட்பட பலரும் குரல் கொடுத்து வருகின்றனர்.

எனவே தான் விவசாய விளை நிலத்தை உரிய மக்களுக்கு வழங்க ஆளும் அரசு ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் .










# சுற்றுலாவில் இந்திய முதலீட்டாளர்களின் காணிக் குத்தகை தொடர்பில் கலந்தாய்வு

சுற்றுலாத் துறையில் இந்திய முதலீட்டாளர்களின் காணிக் குத்தகை செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.



கலந்துரையாடலில் இந்திய முதலீட்டாளர்கள் இலங்கையுடன் இணைந்த வகையில் யாழ்ப்பாண பகுதிகளில் ஆன்மீகம் மற்றும் ஆரோக்கிய சுற்றுலாத் துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வதில் காணிக் குத்தகை ஏற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

கலந்துரையாடலில் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் முதலீட்டு பிரிவின் பிரதிப் பணிப்பாளர், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரச அதிபர், இந்திய முதலீட்டாளர் குழு, கரையோர வளங்கள் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவ பிரிவின் பொறியியலாளர் , மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மருதங்கேணி பிரதேச செயலாளர், பருத்தித்துறை உதவி பிரதேச செயலாளர், சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய விடய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.









# பெண்கள் துடுப்பாட்டத்தில் வென்ற அனலைதீவு மாணவருக்குச் சான்றிதழ்

மாகாண மட்ட 20 வயதின் கீழ் பெண்கள் மென்பந்து துடுப்பாட்ட போட்டியில் அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம் மீண்டும் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்றிய வீராங்கனைகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டன.

அதிபர் புஷ்பகாந்தன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள் இடம்பெற்றன.









# மன அழுத்தத்தில் இருந்து மீண்டெழும் வழிமுறைகள்

அனைத்து மக்களும் வாழ்க்கையில் ஏதோ ஒரு கட்டத்தில் மன அழுத்தத்துக்கு உள்ளாகின்றனர். மன அழுத்தத்தை நெருக்கீடு, நெருக்கீட்டு நிலை எனவும் சிலர் அழைப்பதுண்டு. ஆங்கிலத்தில் ளுவசநளள என அழைக்கப்படுகின்றது. மன அழுத்தம் மனம் சம்பந்தப்பட்ட பாதிப்பாக இருப்பினும் உடலும் வாழ்வும் பாதிக்கப்படுகின்றது. மன அழுத்தம் என்பது பொதுவாக எங்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள் எமது நிலைமைகளுக்கு முகம் கொடுக்க முடியாது உள்ள போது ஏற்படும் நிலையாகக் கொள்ளப்படுகின்றது.

மன அழுத்தத்தால் முற்றாக பாதிப்புத்தான் ஏற்படும் என்று கூறமுடியாது. பரீட்சைக்குத் தயாராகுதல், நேர் முகத் தேர்வுக்கு தயாராகுதல் போன்ற சில நடவடிக்கைக்கு ஏற்படும் அழுத்தம் குறித்த நடவடிக்கைகளை செய்யத் தூண்டும் நல்ல மன அழுத்தமாக விளங்குகின்றது. பொதுவாக மனஅழுத்தம் என்ற பதம் உயிரியல் மற்றும் உளவியல் அடிப்படையில் முதலில் 1930 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டது. இருப்பினும் அண்மைக்காலமாக அதிகம் பேசப்பட்டு வருகின்றது.

மன அழுத்தமானது ஏற்பட பல்வேறுபட்ட காரணங்கள் உள்ளன.

01. குடும்பப் பிரச்சினைகள் குடும்பத்தில் ஏற்படும் சந்தேகங்கள், முரண்பாடுகள், புரிந்துணர்வின்மையால் பிளவுகள் என்பன ஏற்படுகின்றன. இதனால் விவாகரத்து, தனிமைநிலை போன்றனவும் ஏற்படுகின்றன. இதனால் மன அழுத்தம் ஏற்படுகின்றது.

02. இடம்பெயர்வு, யுத்தம், அனர்த்த நிலைகளின் போது ஏற்படும் அழிவுகள் மற்றும் இடப்பெயர்வு நிலைமைகள்.

03. பொருளாதாரப் பிரச்சினை – வறுமை, கடன், தொழிலின்மையால் ஏற்படும் பொருளாதாரப் பிரச்சினை.

04. உறவில் பிரச்சினை – நண்பர்கள் பிரிவு, சண்டைகள், உறவினர்களால் ஏற்படும் மனஸ்தாபங்கள்.

05. வேலைச்சுமை – இன்றைய போட்டி உலகில் உள்ள அதிகரித்த வேலைகளை சரிவரச் செய்ய முடியாமை.

06. உடல் நலக் குறைவு – தூக்கமின்மை மற்றும் நீண்டகால நோய் நிலைமைகள்.

07. கசப்பான அனுபவங்கள் – கடந்த கால அதிர்ச்சிகர அனுபவங்கள்.

08. உயிரிழப்புக்கள் – நண்பர்கள், உறவினர்கள், விருப்பத்துக்கு உரியவர்களின் இழப்புக்கள்.

09. ஆதரவு இன்மை – உறவினர்கள், நண்பர்களின் அன்பு, ஆதரவு கிடைக்காத நிலைமைகள்.

மன அழுத்தத்தைக் கண்டறிவதற்கு அதற்கான அறிகுறிகள் உடல், உள நடத்தை உறவு ரீதியில் காணப்படுகின்றன.

அவையாவன,

1. உடல் – தலையிடி, வலி, நாவறட்சி, களைப்பு, தசையிறுக்கம், பசியின்மை, பாலியல் நாட்டமின்மை, இயத்துடிப்பு அதிகரிப்பு.

2. உளம் – கவலை, கோபம், தேவையற்ற யோசனை, எதிர்மறை நிலை.

3. நடத்தை – மதுபோதை அடிமை, நித்திரை கோளாறு, சக்தி குறைதல், கவனக் குறைவு, ஒரு வேலை தொடர்ந்து செய்வது கடினம்.

4. உறவு – வாக்குவாதம், புரிந்துணர்வின்மை, ஆதரவின்மை, சண்டை, உடன்பாடின்மை.

மனஅழுத்தத்தின் மூலம் ஏற்படும் விளைவுகள் மனித வாழ்வை சின்னாபின்னம் ஆக்குகின்றன. அவையாவன,

மனச்சோர்வு, நீரிழிவு, கவனக் கோளாறு, மலச்சிக்கல், தூக்கக்குறைபாடு, மாதவிடாய்கோளாறு, போதை அடிமை நிலை, சுயநலன் குறைவு, நுண்ணுயிர் எதிர்ப்பு சக்தி குறைதல், நினைவாற்றல் குறைதல், கவனக்குறைவு, வேலை, கல்விப் பாதிப்புப் போன்ற பல விளைவுகள் ஏற்படுகின்றன.

கனேடிய விஞ்ஞானியான ர்யளெ ளுநடலந என்பவர் தனது ஆராய்ச்சியின் மூலம் மன அழுத்தத்தால் நீரிழிவு, உயர்குருதி அழுத்தம், தொற்றாநோய்கள் என்பன அதிகம் ஏற்படும் என்கின்றார். அது மட்டுமல்லாது சுழடிநசவ ளுயிழடளமல என்பவர் நீண்டகால மனஅழுத்தம் மூளை நினைவாற்றல் பகுதியான "ஹிப்போகிம்பாஸ்ஸை" (ர்ீழஉயஅிரள) பாதிக்கின்றது என்கிறார். ளுாநடனழெ ஊழாநெ என்ற உளவியல் ஆய்வாளர் மனஅழுத்தம் உள்ளவர்களுக்கு சளி, காய்ச்சல் போன்ற நோய்கள் எளிதாக ஏற்படுவதுடன் நுண்ணுயிர்த் தாக்கங்களும் அதிகம் ஏற்படும் என்று கண்டறிந்தார்.

மன அழுத்தத்திலிருந்து மீண்டு வருவதற்கான

தொடர்ச்சி▼

# மன அழுத்தத்தில் இருந்து மீண்டெழும் வழிமுறைகள்

தொடர்ச்சி▲

வழிமுறைகள் பற்றி பார்ப்போம்,

● மனப்போக்கை மாற்றுதல் – நெருக்கீடு மற்றும் கடினமான சூழ்நிலையில் மனம் இறுக்கத்துக்கும் குழப்பத்துக்கும் உள்ளாகிறது. இதனால் ஓய்வு எடுத்தலுடன் புத்தகம் படித்தல், விரும்பிய செயற்பாடுகளில் ஈடுபடுத்தல் முதலானவற்றில் ஈடுபடுவதன் மூலம் மனம் சுவாத்தியமடைகின்றது.

● சீரான உணவுப்பழக்கம் – எண்ணெய், சீனி அதிகமுள்ள உணவுகள் மற்றும் துரித உணவுகளை விட்டு ஊட்டச்சத்துள்ள உணவுகளை உட்கொள்ளல், புரத உணவுகள் மற்றும் பழங்கள், கீரை வகை, காய்கறிகள், தானியங்களை அதிகம் எடுத்தல்,தண்ணீர் நன்றாக குடித்தல்.

● ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபடல் – ஆக்க பூர்வமான செயற்பாடுகள் நல்ல மருத்துவமாகும். அந்தவகையில் நெருக்கீடு பற்றியும் அதன் விளைவு மற்றும் குணம் குறிகள் பற்றியும் தெளிவு இருத்தல் வேண்டும். கட்டுரை எழுதுதல், கவிதை எழுதுதல், வரைதல் முதலான ஆக்கச் செயற்பாடுகளிலும் ஈடுபடுதல் மன அழுத்தத்திலிருந்து மீள உதவுகிறது.

● உடல் ஆரோக்கியத்தில் கவனம் கொள்ளல் – ஒரு சராசரி மனிதனுக்கு போதிய தூக்கம் அவசியம். (6 – 8) மணி நேர தூக்கம் அவசியமாகின்றது. ஒருநாள் நாம் சரியாக தூங்காவிட்டாலும் கூட நம் மூளை 60 வரை நேபயவளைந நுஅழவலைனு க்கு ரியாக்ட் செய்யும்.

ஒவ்வொருவருக்கும் தினமும் நல்ல தூக்கம் என்பது அவசியம் தேவை என்று நரம்பியல் விஞ்ஞானி மெத்யு வாக்கரின் ஆய்வில் தெரியவந்துள்ளது. தினமும் உடற்பயிற்சி செய்வது உடலை வலுவாக்குவதுடன் மனதையும் புத்துணர்வாக்குகிறது. குறைந்தது 30 நிமிடம் உடற்பயிற்சி செய்வது பல்வேறு நன்மைகளை ஏற்படுத்துகிறது. உடற்பயிற்சியின் மூலம் “எண்டோமின்” எனும் இரசாயனம் மூளையில் சுரந்து சந்தோசம், புத்துணர்வை ஏற்படுகிறது.

● குடும்ப சமுதாய ஆதரவு – தனக்கு மட்டும் தான் இப்பிரச்சினை உள்ளது என எண்ணி இருக்கக் கூடாது. தேவையற்ற இது பற்றிய (அதிக யோசனை தனிமை மற்றும் மனஅழுத்தம், மனச்சோர்வு நிலை வரை இட்டுச் செல்கின்றது. இதனால் குடும்ப மட்டத்திலும் சமூக மட்டத்திலும் ஆதரவு வழங்குவது அவசியம்.

● வேலைச் சூழல் சீரமைப்பு – தொழில் வேலை தனிப்பட்ட ஒவ்வொருவரதும் வாழ்க்கைக் கோலத்தில் முக்கியமானதாகும். பொருளாதாரம் தரும் ஒரு மார்க்கமாக இருப்பதுடன் வாழ்க்கையை நடத்தவும் உதவுகின்றது. இதனால் வேலையை சீரான முகாமைத் துவத்துடன் செய்யாது விடின் நெருக்கடி நிலை, பிரச்சி னைகள், வேலை இழப்பு என்பன ஏற்படும். இதனால் வேலையைச் சரியான திட்டமிடலுடன் செய்வதுடன் தன்நம்பிக்கையுடன் செய்வதும் முக்கியம்.

● குழுக்கள் அமைத்தல் – ஒரே விதமான நெருக்கீட்டால் (மன அழுத்தத்தால்) பாதிக்கப்பட்டவர்களை ஒன்று சேர்த்தது, அவர்களது பிரச்சினைகளைக் கலந்து ஆலோசிக்கச் செய்வதன் மூலம் பிரச்சினை பற்றிய விளக்கம் கிடைப்பது மட்டுமல்லாமல் பரஸ்பர ஆதரவு, நம்பிக்கை என்பன ஏற்படுவதுடன் மன அழுத்தத்தை எதிர்கொள்வது பற்றிய தெளிவும் ஏற்பட்டு மனஅழுத் தத்தில் இருந்து மீண்டெழுவதற்கு சுலபமாகின்றது.

● நேரான சிந்தனைகள் –ீழளவைளந வுாழைமைபெ யுனெ புசயவவைரனந இருப்பது நல்லது. உதவி செய்யும் போது நன்றி கூறுதல், தவறுகளின் போது



மன்னிப்பு கேட்டல் மற்றும் பெரியோர்களை மதித்தல், பணிவாக நடத்தல், தன்னம்பிக்கையை வளர்த்தல் போன்றன எங்களை ஊக்குவிப்பதாகவும் அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதாகவும் உள்ளது.

● பொழுது போக்குகளில் ஈடுபடுதல் – விளை யாட்டுக்கள், சினிமா செல்லுதல், நண்பர்களுடன் சுற் றுலா செல்லல், பயிற்சிப்பட்டறைகளில் கலந்து கொள் ளல் என்பன இறுக்கமான மனதை லேசாக்கி மகிழ்ச்சியாக்க உதவுகின்றது.

● இசை – இசைக்கு மயங்காதவர் எவரும் இல்லை. வாழ்க்கையுடன் இசை கலந்துள்ளது. தாலாட்டு தொடங்கி ஒப்பாரிவரை பாடல் இசை என்பன பங்காற்றுகிறது. நாட்டார் இசை மற்றும் கோயில் இசை, சினிமா இசை என்பன பல நோக்க நிற்கலாக இருத்தலும் எம் மனதை சாந்திப்படுத்தவும் பிரச்சினைகளை மறக்க வைக்கவும் உதவுகின்றது.

● உளவியல் உதவி மற்றும் உளக்கல்வி – உள வியல் சார்ந்து மன அழுத்தம் பற்றி தெளிவூட்டல் அவசியம். பிரச்சினைக் காரணம், விளைவு பற்றிய அறிவூட்டல் குறித்த நபருக்கு மட்டுமன்றி குடும்பத் துக்குமான அறிவூட்டல் மூலம் குறித்த பிரச்சினை பற்றிய தெளிவு கிடைக்கிறது. பிரச்சினை தீர்க்கும் வழிகள் தன்நம்பிக்கை செயற்பாடுகளைச் செய்யத் தூண்டுவதன் மூலமும் மனஅழுத்தத்தில் இருந்து மீண்டெழ முடியும்.

● சமுதாய உறவுகளை பலப்படுத்தல் – சமுதாய செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன் அவைசார் ஒழுக்க விழுமியங்களை பின்பற்றுவதன் ஊடே சமூக உறவுகள் வலுவடைகிறது. விழாக்கள், விளையாட்டுக்கள், சடங்குகள், கலை நிகழ்ச்சிகள் முதலியவற்றில் ஈடுபடல் நன்மை பயக்கும்.

● சாந்த வழிமுறைகள் – மனதை சாந்தப்படுத்தும் அமைதியாக்கும் பயிற்சிகளில் ஈடுபடுதல், சுவாசப் பயிற்சி, தியானம், யோகாசனம், மந்திர உச்சாடனம், சாந்தியாசனம் முதலியவற்றில் ஈடுபடுதல். இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் போது அதற்கான இடம் அமைதியானதாக காற்றோட்டம் உள்ளதாக ,ருப்பதுடன் தளர்வான ஆடை மற்றும் நேரமுகாமைத்துவமும் அவசியம். தியானம் ஒருநாளில் குறைந்தது 15 நிமிடம் செய்வதன் மூலம் “கோர்டிசோல் ஹார்மோன்” குறைந்து மன அழுத்தம் குறைய உதவுகின்றது.

**நடராசா கோபிராம்,**
உளவியல் துறை மாணவன்,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.






# பிறப்புச் சான்றிதழ் இல்லாத குழந்தைகளுக்கு அவற்றை வழங்குவதை விரைவுபடுத்துங்கள்

## நுவரெலியாவில் மாவட்டச் செயலாளர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்து

(மஸ்கெலியா)

நுவரெலியா மாவட்டத்தில் பிறப்புச் சான்றிதழ் இல்லாத அனைத்து குழந்தைகளுக்கும் பிறப்புச் சான்றிதழ் வழங்குவதை மாவட்ட குழந்தைகள் மற்றும் பெண்கள் மேம்பாட்டுக் குழு முன்னுரிமையாகக் கொள்ள வேண்டும் என்று நுவரெலியா மாவட்டச் செயலாளர் துஷாரி தென்னகோன் கூறினார்.

குழந்தைகளுக்காகப் பணியாற்றுவதில் அவர்களின் பிறப்புச் சான்றிதழ்கள் அவசியம் என்றும், குழந்தைகள் பள்ளிகளில் சேராததால் பள்ளிகளில் சேருவதில் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

கடந்த 19 ஆம் திகதி நுவரெலியா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட குழந்தைகள் மற்றும் பெண்கள் மேம்பாட்டுக் குழுவில் பங்கேற்றபோது மாவட்டச் செயலாளர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். மாவட்டப் பதிவாளர் துறையுடன் இணைந்து நடமாடும் சேவைகள் போன்ற நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வதன் மூலம் பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாத அனைத்துக் குழந்தைகளுக்கும் உடனடியாக பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

மாவட்டத்தில் பள்ளி செல்லாத குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்புதல், 16 வருட பள்ளிப்படிப்பை முடித்த குழந்தைகளை தொழிற்கல்வியில் சேர்ப்பது, போக்குவரத்து சிரமங்களுடன் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளை வழங்குதல், குழந்தைகளை விட்டுச் செல்லும் தாய்மார்களை சோதித்தல் போன்ற பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் மாவட்டச் செயலாளர் வலியுறுத்தினார்.

மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி) திருமதி ஷாலிகா லிண்டகும்புர, மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர்கள், வலயக் கல்வி இயக்குநர்கள், இலங்கை காவல்துறை, தொழிலாளர் அலுவலகம், நன்னடத்தை அலுவலக அதிகாரிகள், மாவட்டத்தில் குழந்தைகளுக்காகப் பணியாற்றும் அனைத்து அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள், குழந்தைகள் மற்றும் மகளிர் விவகார அதிகாரிகள், வெளியுறவு சேவை மேம்பாட்டு அதிகாரிகள், சமூக சேவை அதிகாரிகள் மற்றும் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# தொலைந்த பணப்பை உரியவரிடம் ஒப்படைத்த இளைஞனுக்குப் பாராட்டு

(பாறுக் ஷிஹான்)

வீதியில் கண்டெடுக்கப்பட்ட பணப்பை உரியவரிடம் ஒப்படைக்கப் பட்டதுடன் பணப்பையை கண்டெடுத்து ஒப்படைத்த இளைஞனை கல்முனை தலைமையக பொலிஸார் பாராட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் இன்று இடம்பெற்றது.

தொலைந்த பணப்பை மீட்கப்பட்டு பொலிஸார் முன்னிலையில் உரிய நபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது,

அரபு நாடு ஒன்றில் இருந்து விடுமுறையில் நாடு திரும்பிய நாவிதன் வெளி பகுதியை சேர்ந்த இளைஞன் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சந்தைக்கு சென்ற நிலையில் பணப்பையை வீதியில் கண்டெடுத்துள்ளார்.

பின்னர் குறித்த இளைஞன் வீதியில் இருந்து கண்டெடுத்த குறித்த பணப்பையை எடுத்துக்கொண்டு தனது வீட்டுக்கு சென்று ஆராய்ந்து அந்தப் பணப்பையில் இருந்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தன்னிடம் பணப்பை இருப்பதாகவும் அதனை கல்முனை பொலிஸ் நிலையத்துக்கு வந்து பெற்றுக்கொள்ளுமாறும் கூறியுள்ளார்.




அத்துடன் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று குறித்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தவறவிடப்பட்ட பணப்பையை கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு வந்து உரியவர் பெற்றுக் கொண்டார்.

அவர் மருதமுனை பகுதியை சேர்ந்த அன்றாடம் இடியப்ப விற்பனையில் ஈடுபடும் நபராவார். மிக சிரமத்துடன் வாழ்வாதாரத்தை நடத்தி செல்வதாக குறிப்பிட்ட அவர் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவில் வசிப்பதுடன் தனது பணப்பையானது கல்முனை சந்தைக்கு பொருள் கொள்வனவிற்காக சென்ற போது தவறவிடப்பட்டிருந்ததாக குறிப்பிட்டார்.

தவறவிடப்பட்ட பணப்பையை பொலிஸார் முன்னிலையில் உரிமையாளிடம் ஒப்படைக்க முயற்சி செய்த அரபு நாட்டில் இருந்து தொழில் நிமிர்த்தம் விடுமுறையில் நாடு திரும்பிய நாவிதன்வெளி பகுதியை சேர்ந்த இளைஞன் பொலிஸாரால் பாராட்டப்பட்டார்.



## மதுரை மாநாடு வெற்றி;

# மனசாட்சி உள்ள மக்களாட்சியை நிலைநாட்டுவது மட்டுமே இலக்கு

## கட்சித் தொண்டர்களுக்கு விஜய் கடிதம்

“மதுரை மாநாட்டின் வெற்றி என்பது, உங்கள் ஒவ்வொருவரின் உழைப்பிலும், பங்களிப்பிலும் மட்டுமே சாத்தியமாகி இருக்கிறது. மனசாட்சி உள்ள மக்களாட்சியை நிலைநாட்டுவது மட்டுமே நம் இலக்கு.”

– இவ்வாறு த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கட்சித் தொண்டர்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதம் மேலும் குறிப்பிடுகையில்,

“மதுரையில் நடந்த 2 ஆவது மாநில மாநாட்டின் வெற்றி என்பது உங்கள் ஒவ்வொருவரின் உழைப்பிலும், பங்களிப்பிலும் மட்டுமே சாத்தியமாகி இருக்கிறது. எத்தனை மறைமுகத் தடைகள் உருவாக்கப்பட்டாலும், நமக்காக மக்கள் கூடும் திடல்கள் எப்போதும் கடல்களாகத்தான் மாறும் என்பதை உணர்ந்து, மாநாட்டுப் பணிகளை சிறப்புடன் மேற்கொண்ட நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவருக்கும் மனம்நிறைந்த பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் மீது வீசப்படும் விமர்சனங்களில் நல்லவற்றை மட்டும் நமதாக்கி உரமேற்றுவோம். மற்றவற்றை புறந்தள்ளிப் புன்னகைப்போம். மக்களோடு மக்களாக இணைந்து நிற்கும் மக்கள் அரசியல் மட்டுமே, நமது நிரந்தர அரசியல் நிலைப்பாடு. மனசாட்சி உள்ள மக்களாட்சியை நிலைநாட்டுவது மட்டுமே நம் இலக்கு.

1967, 1977 தேர்தல் அரசியல் வெற்றி விளைவுகளை வரும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலிலும் தமிழ் மக்கள் நிகழ்த்திக் காட்டப் போவது நிச்சயம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# அமித் ஷா ஆயிரம் முறை வந்தாலும் தமிழகத்தில் பா.ஜ.க. காலூன்ற முடியாது

## செல்வப்பெருந்தகை கருத்து

அமித் ஷா 1000 முறை வந்தாலும் தமிழகத்தில் பா.ஜ.கவால் காலூன்ற முடியாது என்று தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை,

“நெல்லையில் நேற்று முன்தினம் பா.ஜ.க. கூட்டத்தில் உரையாற்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.க. அரசை அகற்றுவோம் என்றும், அ.தி.மு.க – பா.ஜ.க. கூட்டணி ஆட்சி அமைக்கும் என்றும் அதிகார மமதையுடன் பேசியிருக்கிறார்.

தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிக்கு வர வேண்டுமென்று கூறும் அமித் ஷா, அ.தி.மு.க. முதல்வர் வேட்பாளர் பழனிசாமி பெயரைக்கூட உச்சரிக்கவில்லை. அ.தி.மு.க. தலைமையோ,உள்துறை அமைச்சரின் அதிகாரத்துக்கு கட்டுப்பட்டு, அமலாக்கத் துறை, வருமான வரித்துறையில் இருந்து தங்களை காப்பாற்றிக் கொள்ள பொருந்தாக் கூட்டணி அமைத்திருக்கிறார்கள். இத்தகைய சந்தர்ப்பவாத கூட்டணியை மக்கள் நிராகரிப்பார்கள்.

தி.மு.க. ஆட்சியில் ஊழல் நிறைந்துள்ளதாக அமித் ஷா கூறியுள்ளார். கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாக தி.மு.க. ஆட்சியில் ஊழல் நடந்துள்ளதாக எந்த வழக்கும், எந்த நீதிமன்றத்திலும் நிலுவையில் இல்லை. ஆனால், 11 ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் ரபேல் விமான ஊழல், தேர்தல் நன்கொடை பத்திர மோசடி என பல மோசடிகள் நடந்துள்ளன.



தேர்தல் ஆணையம் மூலம் வாக்குகளை திருடி ஆட்சிக்கு வந்த நரேந்திர மோடி, அமித்ஷா உள்ளிட்டோரின் அவதூறு கட்டுக்கதைகளை தமிழக மக்கள் நம்ப தயாராக இல்லை. தமிழ் மொழிக்காக பரிந்து பேசும் அமித் ஷா, அதற்காக 20 கோடி ரூபா நிதியை மட்டுமே ஒதுக்கினார். எனவே, அவரது பேச்சை தமிழக மக்கள் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள். அமித் ஷா ஆயிரம் முறை வந்தாலும், தமிழகத்தில் பா.ஜ.க. காலூன்ற முடியாது.” என்று குறிப்பிட்டுள்ளார்.






# இந்தியாவின் விண்வெளி பயணம் மேலும் புதிய உயரங்களை தொடும்

## பிரதமர் மோடி உறுதி

இந்திய வீரர்களை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் எனவும் வருங்காலத்தில் இந்தியாவின் விண்வெளி பயணம் புதிய உயரங்களை தொடும் என்றும் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

சந்திரயான் 3 திட்டம் மூலம் கடந்த 2023 ஓகஸ்ட் 23 ஆம் திகதி நிலவின் தென்துருவத்தில் இந்தியா கால் பதித்தது. இதை நினைவுகூரும் விதமாக கடந்த 2024 ஆம் ஆண்டு முதல் ஓகஸ்ட் 23 ஆம் திகதி தேசிய விண்வெளி தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. டில்லி பாரத் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தேசிய விண்வெளி தினவிழாவில், பிரதமர் மோடி காணொலி வாயிலாக உரையாற்றினார்.

அப்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பண்டைய ஞானத்தில் இருந்து எல்லையற்ற சாத்தியக்கூறுகள் வரை’ என்பதே இந்த ஆண்டு விண்வெளி தினத்தின் கருப்பொருள். கடந்த 2023 இல் நிலவின் தென் துருவத்தில் கால் பதித்து உலக சாதனை படைத்தோம். அதை தொடர்ந்து, விண்வெளியில் செயற்கைக் கோள்களை இணைக்கும் ‘டாக்கிங்’ தொழில்நுட்பத்தில் வெற்றி அடைந்துள்ளோம். இந்த தொழில்நுட்ப திறன் கொண்ட உலகின் 4 ஆவது நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.

நமது குரூப் கேப்டன் /பான்/ சுக்லா வெற்றிகரமாக சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு சென்று திரும்பியுள்ளார். அங்கு அவர் தேசியக் கொடியை ஏற்றி சாதனை படைத்தார். சமீபத்தில் நான் அவரை சந்தித்தபோது, அந்த கொடியை என்னிடம் காண்பித்தார். அதை பார்த்து பேரானந்தம் அடைந்தேன். இதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.

உலகின் மிகப்பெரிய விண்வெளி மையமாக இந்தியா உருவெடுத்து வருகிறது. கிரையோஜெனிக் இயந்திரம், மின்சார உந்துவிசை போன்ற தொழில்நுட்பங்களில் இந்தியா அதிவேகமாக முன்னேறி வருகிறது. இந்திய வீரர்களை விண்வெளிக்கு அனுப்பும் ‘ககன்யான்’ திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும். இதை தொடர்ந்து, அடுத்து வரும் ஆண்டுகளில் இந்திய விண்வெளி நிலையம் கட்டப்படும்.

விண்வெளி துறையில் கடந்த 11 ஆண்டுகளில் மாபெரும் சீர்திருத்தங்களை அமுல்படுத்தி உள்ளோம். குறிப்பாக, விண்வெளி துறையில் தனியார் நிறுவனங்கள் பங்கேற்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, விண்வெளி தொழில்நுட்பம் சார்ந்த 350 ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் உருவாகியுள்ளன. விண்வெளி துறையில் இந்திய இளைஞர்கள் அதிக அளவில் களமிறங்கி சாதிக்க வேண்டும்.

அடுத்த 5 ஆண்டுகளில் விண்வெளி துறையில் 5 யூனிகார்ன் நிறுவனங்கள் உருவாக வேண்டும். தற்போது ஆண்டுதோறும் 5 முதல் 6 பெரிய ராக்கெட்கள் விண்ணில் செலுத்தப்படுகின்றன. அடுத்த 5 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கையை 50 ஆக அதிகரிக்க வேண்டும். அதன் பிறகு, வாரத்துக்கு ஒரு ராக்கெட்டை விண்ணில் ஏவ வேண்டும்.


மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த விண்வெளி தொழில்நுட்பத்தை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தி வருகிறோம். பசல் பீமா யோஜனா திட்டத்தின்கீழ் செயற்கைக் கோள்கள் மூலமாக மீனவர்களுக்கு அத்தியாவசிய தகவல்கள் வழங்கப்படுகின்றன. விண்வெளி தொழில்நுட்பம் மூலம் பேரிடர் மேலாண்மை திட்டங்கள் திறம்பட செயல்படுத்தப்படுகின்றன. ‘பிரதமர் கதி சக்தி’ திட்டத்தில் புவிசார் தரவுகள் பயன்படுத்தப்படுகின்றன. வருங்காலத்தில் இந்தியாவின் விண்வெளி பயணம் புதிய உயரங்களை தொடும்.” என்றார்.

# டொனால்ட் ட்ரம்பை விமர்சித்தவர் முன்னாள் அதிகாரி வீட்டில் சோதனை

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் முன்னாள் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் போல்டன், இந்தியா மீதான ட்ரம்பின் வரி விதிப்பு கொள்கையைக் கடுமையாக விமர்சித்திருந்த நிலையில், அவரது வீட்டில் அந்நாட்டு மத்தியப் புலனாய்வு அமைப்பினர் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

ரஷ்யாவுக்கு எதிராகப் பொருளாதார அழுத்தத்தை உருவாக்க இந்தியாவுக்கு ட்ரம்ப், 50 சதவீத வரி விதித்தமை அமெரிக்காவுக்கு மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் ட்ரம்பின் இத்தகைய செயல்கள் நம் நாட்டை ஆபத்தில் ஆழ்த்துகின்றன என்றும் ஜோன் போல்டன் கூறியிருந்தார்.

இந்த நிலையில், அமெரிக்க அரசாங்கத்தின் இரகசிய ஆவணங்கள், மத்தியப் புலனாய்வு அமைப்பினர் பறிமுதல்






செய்த ஆதாரங்களைச் சேமித்து வைத்திருந்ததாகக் கூறி, ஜோன் போல்டனின் வீடு மற்றும் அலுவலகங்களில் மத்தியப் புலனாய்வு அமைப்பினர் சோதனையில் ஈடுபட்டனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# அமெரிக்க பாதுகாப்பு திணைக்கள உளவுத்துறை தலைவர் பணிநீக்கம்




அமெரிக்க பாதுகாப்பு திணைக்களமான பென்டகனின் உளவுத்துறை அமைப்பின் தலைவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்ஸெத் இந்த பதவி நீக்கத்தை அறிவித்துள்ளார்.

ஈரான் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல்களின் தாக்கம் தொடர்பான மதிப்பாய்வை வெள்ளை மாளிகை கண்டித்த சில வாரங்களுக்குப் பின்னர் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, லெப்டினனட் ஜெனரல் ஜெஃப்ரி க்ரூஸ், இனி அமெரிக்க பாதுகாப்பு புலனாய்வு அமைப்பின் தலைவராகப் பணியாற்ற மாட்டார் என பென்டகன் தெரிவித்துள்ளது.

அத்துடன், மேலும் 2 மூத்த இராணுவத் தளபதிகளும் பென்டகனால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

எனினும் இது குறித்த தகவல்களை, அமெரிக்க பாதுகாப்புத் துறை வழங்கவில்லை.

கடந்த ஜுன் மாதத்தில், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஈரான் மீதான தாக்குதல்களின் போது, ஈரானில் உள்ள அணுசக்தி தளங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டு விட்டன என்று அறிவித்தார்.

எனினும் இந்த தாக்குதல்கள், ஈரானின் அணுசக்தித் திட்டத்தைச் சில மாதங்கள் மட்டுமே பின்னுக்குத் தள்ளியதாக, அமெரிக்க பாதுகாப்பு புலனாய்வு நிறுவனத்தின் தகவல் வெளியில் கசிந்தது.

இந்தநிலையில், அந்த நிறுவனத்தின் மதிப்பீட்டை முற்றிலும் தவறானது என்று வெள்ளை மாளிகை அறிவித்தது.

அத்துடன், வரலாற்றில் மிகவும் வெற்றிகரமான இராணுவத் தாக்குதல்களில் ஒன்றை இழிவு படுத்தும் முயற்சி என்றும் ட்ரம்ப் குற்றம் சுமத்தியிருந்தார்.

# சீனாவில் இடிந்து வீழ்ந்த பாலம்; 12 பேர் பலி, நால்வர் மாயம்



சீனாவின் மஞ்சள் நதியின் குறுக்கே கட்டுமானத்தில் இருந்த ரயில் பாலம் இடிந்து வீழ்ந்ததில், 12 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 4 பேரைக் காணவில்லை என்றும் வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

சீனாவின் சிச்சுவான் – கிவிங்ஹாய் மாகாணங்களுக்கு இடையேயான தொடருந்து திட்டத்தின் ஒரு பகுதியாக, கிவிங்ஹாய் மாகாணத்தில் மஞ்சள் நதியின் குறுக்கே ரயில் பாலம் கட்டப்பட்டு வருகிறது.

இந்நிலையில், இரும்புக் கம்பியை இறுக்கும் பணியின் போது, கம்பி அறுந்ததால் பாலம் இடிந்து வீழ்ந்தது.

இதையடுத்து, பாலத்தின் மீது பணியில் ஈடுபட்டிருந்த 16 தொழிலாளர்களும் ஆற்றுக்குள் வீழ்ந்தனர். இதில், 12 பேர் பலியாகினர், 4 பேர் காணாமல் போயுள்ளனர்.


இதேவேளை, காணாமல் போன தொழிலாளர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பக்கங்கள் 03

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை | 24/08/2025

## இந்திய இளைஞர் கனடாவில் கைது



தலைமறைவாக இருந்த இந்திய வம்சாவளி இளைஞர் ஒருவர் கனடாவில் கைது செய்யப்

02




# 80 வயது மூதாட்டியை கத்தியால் குத்திய சிறுமி

கனடாவின் டொராண்டோ ஒரு 80 வயதுடைய மூதாட்டியை கத்தியால் குத்தியதாக 16 வயது சிறுமி மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

செப்பர்ட் அவென்யூ கிழக்கு மற்றும் மெக்கோவன் ரோடு பகுதியில் இந்த கத்திக்குத்து இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பான கதவல் கிடைத்ததை அடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்றுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மூதாட்டி உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

03

# ஒன்ராறியோ மாகாண இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் காயம்




ஒன்ராறியோ மாகாண இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மூவர் காயமடைந்தனர். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நெடுஞ்சாலை 9 இற்கு தெற்கே உள்ள பின்னர்டி சைட் ரோட்டில் அமைந்துள்ள ஒரு வீட்டில் துப்பாக்கிச் சூடு நடந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தைத் தொடர்ந்து பொலிஸார், பொதுமக்களை தற்காலிகமாக உள்ளே தங்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது.

சிறிது நேரத்திற்குப் பிறகு, துப்பாக்கிக் காயங்களுடன் மூவர் கண்டறியப்பட்டு, அவர்கள் அனைவரும் வைத்தியசாலைக்கு கொண்டு

02




# கனடா நிரந்தர வதிவிட விண்ணப்பதாரர்களுக்கான ஆங்கில சோதனையில் புதிய மாற்றம் செய்யப்பட்டது

கனடா நிரந்தர வதிவிட விண்ணப்பதாரர்களுக்கான ஆங்கில சோதனையில் புதிய மாற்றம் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, TOEFL Essentials எனும் புதிய தெரிவை கனடா அரசு ஏற்கும் என அறிவித்துள்ளது.

இதன்மூலம் இந்தியா, இலங்கை உள்ளிட்ட பட நாடுகளிலிருந்து PR விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் மற்றும் தொழில்முனைவோர் அதிக வசதியை பெற முடியும்.

இதில் Federal Skilled Worker Program, Federal Skilled Trades Program மற்றும் Canadian Experience Class ஆகியவை அடங்கும்.

Atlantic Immigration Program மற்றும் பல மாநில தெரிவு திட்டங்களிலும் (PNPs) இந்த தெரிவு ஏற்கப்படும்.

ஆனால், மாநிலங்கள் தனித்தனியாக முடிவெடுப்பதால், அங்குள்ள விதிகள் மாறுபட வாய்ப்பு உள்ளது.

TOEFL Essentials test குறித்த முக்கிய தகவல்கள்

- இந்த தெரிவு 90 நிமிடங்கள் நீளமுடையது.
- கேட்கும் திறன், வாசிப்பு, எழுத்து, மற்றும் பேசும் திறன் ஆகிய நான்கு பகுதிகளையும் மதிப்பீடு செய்கிறது.
- தெரிவுக்குப் பின் கேட்கும் மற்றும் வாசிப்பு திறனுக்கான முடிவுகள் உடனே கிடைக்கும்.
- முழுமையான மதிப்பீடு 6 நாட்களில் வெளியிடப்படும்.
- பல கல்வி நிறுவனங்களுக்கு இந்த மதிப்பெண் அறிக்கையை இலவசமாக பகிர முடியும்.




## இந்திய இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பட்டுள்ளார்.

கனடாவின் மனித்தோபா மாகாணத்தில் ஒரு தாயும் மகளும் உயிரிழக்கக் காரணமாக இருந்த விபத்தொன்றை ஏற்படுத்திய இந்திய வம்சாவளி இளைஞர் ஒருவர் தலைமறைவாகியிருந்தார்.

இந்நிலையில், 9 மாதங்களுக்குப் பின் கனடாவில் கால்வைத்த அவரை பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.

கடந்த ஆண்டு, நவம்பர் மாதம் 15ஆம் திகதி, மனித்தோபா மாகாணத்திலுள்ள Altona என்னுமிடத்தில் சிக்னலில் நிற்காமல் சென்ற ட்ரக் ஒன்று கார் ஒன்றின் மீது மோதியது.

அந்த விபத்தில், காரில் பயணித்த சாரா (வயது 35) என்னும் பெண் சம்பவ இடத்திலேயே பலியானார். அவருடன் பயணித்த அவரது மகளான அலெக்சா (வயது 8) மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

விபத்தை ஏற்படுத்திய ட்ரக்கை இயக்கிய நவ்ஜீத் சிங் (வயது 25) என்னும் இளைஞரும் காயங்களுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட நிலையில், மாயமாகிவிட்டார்.

அவரைக் கைது செய்ய கனடா முழுமைக்குமான பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், 9 மாதங்களுக்குப் பின், வியாழக்கிழமையன்று, எத்தியோப்பியன் ஏர்லைன்ஸ் விமானம் ஒன்றில், ரொரன்றோவிலுள்ள பியர்சன் சர்வதேச விமான நிலையம் வந்திறங்கியுள்ளார் சிங்.

அங்கு தயாராக இருந்த பொலிஸார் சிங்கைக் கைது செய்துள்ளார்கள். காவலில் அடைக்கப்பட்டுள்ள சிங்கை விரைவில் மனித்தோபாவுக்கு கொண்டு வரப்படவுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஒன்ராறியோ மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செல்லப்பட்டனர்.

ஒருவர் தீவிரமான ஆனால் உயிருக்கு ஆபத்து இல்லாத காயங்களுடனும், மற்றொருவர் சிறிய காயங்களுடனும் உள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில், நான்கு பேர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனால், அறியப்படாத எண்ணிக்கையிலான சந்தேக நபர்கள் இன்னும் தலைமறைவாக இருப்பதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். சந்தேக நபர்கள் குறித்த எந்தவொரு தகவலும் வெளியிடப்படவில்லை.

## 80 வயது மூதாட்டியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேரோடி சிறுமியும் பாதிக்கப்பட்டவரும் ஒருவருக்கொருவர் அறிமுகமானவர்கள் எனவும் பொலிஸார் கூறினர்.

விசாரணையின் விளைவாக, டொராண்டோவைச் சேர்ந்த 16 வயது சிறுமி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அவர் மீது கடுமையான தாக்குதல் மற்றும் ஆயுதத்துடன் தாக்குதல் ஆகிய குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் கூடுதல் தகவல்கள் உள்ளவர்கள் பொலிஸாரை தொடர்பு கொண்டு தகவல் வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

